ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீரங்கநாதர் சிந்து.



சென்னை - புரசை
சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1902.

கடவுள் துணை.

ஸ்ரீரங்கநாதர்சிந்து.

இராகம் - முகாரி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

அண்டர்முனிவோர்கள்துதி ஸ்ரீரங்கநாதா-ஓ
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அண்டினேனென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (க)

சண்டனுக்கஞ்சாமலுய்ய ஸ்ரீரங்கநாதா-ஓ
சாயூஜ்யந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சாயூஜ்யந்தந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா (உ)

செந்திருவளரும்ஞான ஸ்ரீரங்கநாதா-ஓ
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சிந்தைநோய்தீர்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா (ங)

வஞ்சகப்பிரபஞ்சமீது ஸ்ரீரங்கநாதா-ஓ
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
மயங்காமலென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (ச)

ஆனையிடர்தீர்த்தவனே ஸ்ரீரங்கநாதா-ஓ
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
அரவிற்பணிந்தவனே ஸ்ரீரங்கநாதா (ரு)

அன்பர்துதிக்கிரங்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
அஞ்சேலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
அஞ்சலுடன்வந்தாள்வாய் ஸ்ரீரங்கநாதா (சா)

ஜோதிசொரூபமான ஸ்ரீரங்கநாதா-ஓ
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
சுகமதுதந்துகாப்பாய் ஸ்ரீரங்கநாதா (எ)

ஆதியந்தங்கடந்த ஸ்ரீரங்கநாதா-ஓ
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
அன்புகூர்ந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (அ)

வேண்டியவரமளிக்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மேன்மைதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௯)

தஞ்சமென்றோரைக்காக்கும் ஸ்ரீரங்கநாதா-ஓ
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சௌபாக்யந்தந்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா (௰)

தீனதயாநிதியே ஸ்ரீரங்கநாதா
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
சித்திதந்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா (௰௧)

என்முகம்பார்த்தருள்வாய் ஸ்ரீரங்கநாதா-ஓ
என்றுமடிமைநானே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
என்றுமடிமைநானே ஸ்ரீரங்கநாதா (௰௨)

மாதுதுயில்வளர்த்தி ஸ்ரீரங்கநாதா-ஓ
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
மானத்தைக்காத்தவனே ஸ்ரீரங்கநாதா (௰௩)

பாண்டவர்கள்தூதுவனே ஸ்ரீரங்கநாதா-ஓ
பாலகனைகாருமையா ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
பாலகனைக்காருமையா ஸ்ரீரங்கநாதா (௰௪)

ஆண்டாளடிபணிந்து ஸ்ரீரங்கநாதா-ஓ
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
ஆனந்தசிந்துசொன்னேன் ஸ்ரீரங்கநாதா(௰௫)

நம்மாழ்வாரடிபணிந்தேன் ஸ்ரீரங்கநாதா-ஓ
நாடிவந்தேன் உன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
நாடிவந்தேன் உன்னைநம்பி ஸ்ரீரங்கநாதா(௰௬)

கம்சன்தனையழித்த ஸ்ரீரங்கநாதா-ஓ
என்னைக் கார்க்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
என்னைக் கார்க்கக்கடனுனக்கே ஸ்ரீரங்கநாதா(௰௭)

அன்றுவிபீஷணர்க்கு ஸ்ரீரங்கநாதா-ஓ
அபையாஸ்தம்தந்தவனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
அபையாஸ்தம்தந்தவனே ஸ்ரீரங்கநாதா(௰௮)

காளிங்கனிர்த்தனனே ஸ்ரீரங்கநாதா-ஓ
கருணைவைத்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலே நீ பாராதென்ன ஸ்ரீரங்கநாதா
கருணைவைத்தென்னையாள்வாய் ஸ்ரீரங்கநாதா(௰௯)

ஆலிலைமேல்பள்ளிகொண்ட ஸ்ரீரங்கநாதா-ஓய
ஆதிநாராயணனே ஸ்ரீரங்கநாதா

ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
ஆதிநாராயணனே ஸ்ரீரங்கநாதா(உ௰)

சங்குசக்ராதரனே ஸ்ரீரங்கநாதா ஓ
ஜானகிமனோகரனே ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
ஜானகிமனோகரனே ஸ்ரீரங்கநாதா(உக)

யிரணியனைசம்மரித்த ஸ்ரீரங்கநாதா-ஓ
ஏழைகளைக் கார்ப்பவர்யார் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
ஏழைகளைக்கார்ப்பவர்யார் ஸ்ரீரங்கநாதா(உஉ)

யிரவும்பகல்துதித்தேன் ஸ்ரீரங்கநாதா-ஓ
யிரங்கிஅருள்தருவாய் ஸ்ரீரங்கநாதா
ஏழைதனைக்கண்ணாலேநீ பாராதென்னஸ்ரீரங்கநாதா
யிரங்கிஅருள்தருவாய் ஸ்ரீரங்கநாதா(உங)

அற்புதகும்மி.

கொம்மியடிப்பெண்கள்-கும்மியடி நீங்கள்
குனிந்துனிமிர்ந்து கும்மியடி

செம்மையாகரங்க னாதனைக்கண்டுமே
சேவித்துக்கும்மி யடியுங்கடி—ரங்கனை
பாவித்துகும்மி யடியுங்கடி.

சர்ப்பசயனத்தை யுடையவரே—அன்று
தர்மர்க்குஅபயாஸ்தம் கொடுத்தவரே
கர்ப்புள்ளதுரோபதையைக் கார்க்கும் பொருட்டாக
கணக்கில்லாசேலையைத் தந்தவரே (கும்மி)

ருவணசம்மாரஞ்செய்தவரே—அன்று
லட்சுமிசிறையை மீட்டவரே
பாதகனுகிய யிரணியனையன்று
பட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே (கும்மி)

தேவர்குறைகளை தீர்த்தவரே மலையால்
கோபிகாஸ்திரீகளை கார்த்தவரே
பூதகிபாலைகுடித்தவரே—அவளை
போகஉயிரை மடித்தவரே (கும்மி)

அபயமபயமென் றோதும்யானைக்கன்று
அர்ப்புதக்காட்சியைத் தந்தவரே
விதமாய்கொக்குவாய் ரெண்டாய்பிளந்திட்டு
விஷமுள்ளகம்சனை கொன்றவனே. (கும்மி)

ஆலிலைமேல்பள்ளி கொண்டவரே—அன்று
அன்பர்க்கருள்தந் தளித்தவரே

சோதியாய்தவழ்ந்து நடந்தவரே—பாம்பை
சூட்சமாய்ரெண்டாய் கிழித்தவரே (கும்மி)

துளசிமாலையை அணிந்தவரே—அன்று
துரியனுக்குதூது சென்றவரே
நிதமாய்ஓர்டி மண்கேட்டரக்கனை
நிலத்திலழுத்தியே கொன்றவரே (கும்மி)

கூர்மஅவதாரம் கொண்டவரே—வெண்ணை
கூசாமல்வாறியே யுண்டவரே
சாதகமான விபூஷணர்க்கன்றுனீர்
சாயுச்சியபதவி தந்தவரே. (கும்மி)

காரைக்கீரைகொய்ய வந்தவரே—நல்ல
காட்டில்மனைவந்து நின்றவரே
பாலர்களாகிய பக்தர்களைக்—கடை
கண்ணால்கண்டுனீ களிக்காயோ (கும்மி)

ஸ்ரீரங்கநாயகர்சிந்து

முற்றிற்று.